# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.18/2023 நாள் : 08.03.2023**

**அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் தினந்தோறும் குடிநீர் வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநகராட்சி ஆணையாளர்கள் துரிதப்படுத்த வேண்டும்.**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்**

இன்று 8.3.2023 மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் அனைத்து மாநகராட்சிகளின் (சென்னை நீங்கலாக) ஆணையர்களுடன் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகளின் நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த 20 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் பொதுமக்களை சரியாக சென்றடைந்துள்ளதா என்பதை தொடர்ந்து ஆய்வு செய்து வரவேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலை அமைப்புப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள், மழைநீர் வடிகால் அமைப்புப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எந்தவித தொய்வுமின்றி மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும். மேலும், புதிய திட்டங்களுக்கான கருத்துருகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கட்டிடங்களுக்கான அனுமதி வழங்குவது, சொத்து வரி விதிப்பது போன்ற பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். புதுமையான திட்டங்களுக்கான கருத்துருக்கள் உரிய விளக்கங்களுடன் உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் காலி மனையிடங்களை முறையாக சொத்து பதிவேட்டில் பதிவு செய்து தணிக்கைக்கு உட்படுத்திட வேண்டும்.

அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் தினந்தோறும் குடிநீர் வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையாளர்கள் முனைப்போடு மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதன்படி நகர்ப்புறங்களில் உள்ள நீர்நிலைகளை

மேம்படுத்தும் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்துப் பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் இருப்பதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் குடிநீரின் தரத்தினை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். எதிர்வரும் கோடை காலத்தில் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் விழிப்புணர்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். மருந்துகள் போதிய இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்திட வேண்டும். தேவையான இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், வரி வசூல் பணிகளை தொய்வில்லாமல் மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநகராட்சி ஆணையாளர்கள் மேற்கொள்ள வேண்டும். மாநகரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து திட்டப் பணிகளும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதை உறுதி செய்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தூய்மை இந்தியா திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் திருச்சி மாநகராட்சி ஆணையாளர்களைப் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இணை இயக்குநர் திரு.பி.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய செயல் இயக்குநர் திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப. மற்றும் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்